[1982 மார்ச் 11

பிற மாநிலத்தில் பூம்புகார் விற்பனை நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 463. திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா –

பூம்புகார் விற்பனை நிலையத்தை வெளி மாநிலங்களில் ஆரம்பிக்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தமிழ்நாடு கைத்திற வளர்ச்சி நிறுவனத்தின் நிதி நிலையைப் பொருத்து பாண்டிச்சேரி, ஹைதராபாத், திருப்பதி, ஜெய்ப்பூர், கல்கத்தா மற்றும் மைசூரில் பூம்புகார் விற்பனை நிலையங்களை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு நிறுவனத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

(முற்பகல் 9–10)

திரு. இரா. தாமரைக்கனி : கல்லணை கட்டி புகழ்பெற்ற கரிகால் பெருவளத்தானின் காவிரிப் பூம்பட்டினத்தைப் போல் இந்த விற்பனைக் கூடங்கள் சின்னக் கோட்டை மாடலில் ஆரம்பிக்கப்படுமா ?

(விடை இல்லை.)

திரு. கோவைத் தம்பி : தமிழ் நாட்டில் செய்யப்படுகிற கைவினைப் பொருட்களுக்கு வெளி நாடுகளில் நல்ல மதிப்பு இருக்கிறது. இப்போது கைத்தறித் துணிகளுக்கு சிங்கப்பூரில் ஒரு கூடத்தைத் திறந்திருப்பதுபோல் சிலைகள், சிற்பங்கள், கைவினைப் பொருள்கள் விற்பனை செய்வதற்கு பூம்புகார் விற்பனை நிலயங்களை சிங்கப்பூர் போன்ற கிழக்கிந்திய நாடுகளில் அவற்றின் கிளைகளைத் துவக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : சிங்கப்பூர், மலேசியா போன்ற தூரக் கிழக்கு நாடுகளில் பூம்புகார் விற்பனை நிலையத்தின் கிளைகளை துவங்குவதற்கு அரசாங்கம் ஆவன செய்து வருகிறது. அதே நேரத்தில் அண்மைக் காலத்தில் கடந்த இரண்டு மூன்று மாதங்களுக்குள்ளாக மொரீஷியஸ் நாட்டிலிருந்தும் வெஸ்ட் ஜெர்மனியிலிருந்தும் வந்தவர்கள் சம்பந்தப்பட்ட நண்பர்கள் மொரீஷ்யஸ் நாட்டிலும், வெஸ்ட் ஜெர்மனிலிருந்து பூம்புகார் விற்பனை நிலையங்களை துவக்க வேண்டும் என்று கருத்து சொல்லியிருக்கிறார்கள். அதனையும் அரசு பரிசீலனை செய்துவருகிறது.

1982 மார்ச் 11]

திரு. இரா. தாமரைக்கனி: பூம்புகார் நகரில் யவனர்களும் கிரேக்கர்களும்மற்றுமுள்ளவர்களும் தமிழ்நாட்டிலிருந்து முத்துக்கள், பவழங்கள், மயில் பீலிகள் ஆகியவற்றை வாங்கிச் சென்றதாக சிலப்பதிகாரம் கூறுகிறது. எனவே பூம்புகார் விற்பனை நிலையங்களை ரோம், ஏதன்ஸ் போன்ற நாடுகளில் துவங்கி அவற்றுடன் நமக்கு இருந்த உறவைப் புதுப்பித்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகளை மனதில் வைத்துக் கொண்டு படிப்படியாக அந்தக் காரியங்கள் செய்யப்படும்.

திரு. இல. பலராமன் : பூம்புகார் விற்பனை நிலையங்களின் மூலம் என்னென்ன பொருள்கள் அதிகமாக விற்பனையாகின்றது? வட ஆற்காடு மாவட்டத்தில் கார்பட்ஸ், தரை விரிப்புகள், அதிகமாகத் தயாராகிறது. அவை தேங்கிக் கிடப்பதை அரசு அறியுமா ? அதற்காக என்ன நடவடிக்கைகளை அரசு எடுக்க இருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பூம்புகார் நிறுவனம் வாயிலாக தஞ்சாவூரில் தொன்மைதொட்டு உருவாக்கி வருகிற உலோக சிற்பங்களும் அதைப் போலவே திருச்சிப் பகுதி அரும்பாவூரில் உருவாக்கி வருகிற மரச் சிற்பங்களும் அதை போல நீண்ட காலமாக உள்ள கலைப் பொருள்கள் இவைகளை எல்லாம் வெளி நாடுகளுக்கு இந்த பூம்புகார் நிறுவனம் மூலமாக ஏற்றுமதி செய்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பொருள்களுக்கு அங்கே ஒரு தொழில் கூட்டுறவுச சங்கம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்னால் அங்கு நடைபெற்ற தொழில் கண்காட்சியில் கூட அது வைக்கப்பட்டிருந்தது. நானே அதைக் கண்ணுற்றேன். அவற்றை விற்பனை செய்வதற்கு தக்க ஏற்பாடுகளை அரசு செய்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண்கள் 464, 465, 466 மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப் பெறுகின்றன.

1979–1981 மார்ச் முடிய வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட சின்ன வெங்காயத்தின் அளவு.

*வினா எண். 383—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1979–1980, 1980–1981 மார்ச் முடிய தமிழகத்தில் விளையும் சின்ன வெங்காயம் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு எவ்வளவு ?